தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 131

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0

வெளிநாடு:

ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சென்னை: ஐப்பசி 29உ சனி (14—11—53) ☆ ☆ ★ வெளியூர்: ஐப்பசி 30உ ஞாயிறு (15—11—53)

தலைநகர் தேர்வு ஆந்திரர் பொறுப்பு!

இதுபற்றி கூற கவர்னர் திருவேதிக்கு உரிமை இல்லை

கவர்னர் ஆட்சி நடைபெறுவதாக அவர் மனப்பால் குடிக்க வேண்டாம்!

அந்த நிலை என்றும் ஏற்படாது என்று உறுதி!

கோதா ரகுராமையா எச்சரிக்கை!

"அரசியல் சட்டப்படி ஆந்திர தலைநகரைத் தேர்ந்தெடுப்பது, ஆந்திர சட்டசபை உறுப்பினர்களையும், ஆந்திர மக்களையும் பொறுத்துள்ள விஷயமாகும்."

"இந்தத் தலைநகர் விவாதத்தில் கவர்னர் கலந்துகொள்வது கண்டிப்பாகக் கூடாது."

"ஆந்திர மாநிலத்தில் ஏற்கனவே தனது ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றத் தவறான நினைப்பைக் கவர்னர் கொள்ளக் கூடாது; அந்த நிலை ஏற்பட என்றும் ஆந்திர மக்கள் விட்டுவிட மாட்டார்கள்."

—இவ்வாறு, விஜயவாடாவில், கடந்த ஒன்பதாம் தேதி, தலைநகர் தேர்வுக் குழுவின் சார்பில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில பேசிய தோழர் கோத்தா ரகுராமையா, எம். பி. அவர்கள் குறிப்பிட்டார். கூட்டத்திற்கு நகராட்சி மன்றத் தலைவர் தலைமை வகித்தார்.

விஜயவாடா, நவ. 12—

"தலைநகரைத் தேர்ந்தெடுப்பதில் நாம் முன்னுள்ள செய்துள்ள முடிவுகளுக்கு மதிப் பளித்து நடந்துகொள்ள வேண்டும்"

என்று, கவர்னர் திருவேதி, இதே விஜயவாடாவில், நான்கு நாட்களுக்கு முன்பாக நகரசபை வரவேற்புக்குப் பதில் அளிக்கும் போது குறிப்பிட்டார்.

★★★★★★★★★★★

யாருக்கு யார் மன்னிப்பு கேட்பது?

"ராஜாஜி சொல்வதை யெல்லாம் வேத வாக்காக கருதுபவன் நானல்ல; அவர் கொண்டுவந்திருக்கும் வர்ணாஸ்ரமக் கல்வித் திட்டம் நலலதல்ல. திட்டம் தவறு என்று தெரிந்தும் ராஜாஜி அதை ஒப்புக் கொண்டு மன்னிபபுக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். அவர் அப்படிச் செய்யா விட்டாலும் அவர் சார்பில் தவறுதலுக்காக நான் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—தெ. ஆ மா. காங்கிரஸ் செயலர்ளர் தேவனுகப்யா.
—த. நா. 14—11—53

★★★★★★★★★★★

சூயஸ் தளத்தின் மதிப்பு 5 ப கோடி பவுன் பெறுமானமுள்ளதாம்!

லண்டன், நவ. 14—

சூயஸ் தளத்தின் மதிப்பு மட்டும் 50,00,00,000 பவுன் என்று சொல்லப்படுகிறது. இப்பிரதேசத்தில் பிரிட்டன் 80,000 துருப்புகளை வைத்துள்ளது. இது, ஒரு சிறு படைதளமாகும்! சூயஸின் நீளம் 90 மைல்; குறுக்கே 60 மைல்.

★★★★★★★★★★★

? வழி?

"தற்போது காங்கிரசில் யாரை வேண்டுமானாலும், சேர்த்துக் கொள்கிறார்கள்; இப்படிச் [illegible]ல் காங்கிரஸ் கட்சி[illegible] ஆபத்து நிச்சயம். இந்த வ[illegible]கத்தை நான்கூட எதி[illegible]றேன்."

"காங்கி[illegible] கட்சியில் ஒருவரை[illegible] சேர்க்க வேண்டுமானால்[illegible] அவரது குலம்—கோத்திர[illegible] நல்லவனா—கெட்டவ[illegible] படிப்பு முதலியவற்றைக் [illegible]னிக்க வேண்டும்."

—காவே[illegible]பாக்கத்தில் மேயர் [illegible] கல்வராயன்
'தினத் தந்தி' 14-11-53.

★★★★★★★★★★

அலகாபாத்தில் 'காட்டுமிராண்டி'த்தனம்!

'நான்சென்ஸ்' பண்டிதர் நாட்டில் ரயில் நிறுத்தக் கிளர்ச்சி

அலகாபாத், நவ. 13—

நேற்று அலகாபாத்திலிருந்து 85 மைல் தூரத்தில் பிரயாணிகள் ரயில் வண்டியை அரைமணி நேரம் தடுத்து நிறுத்தியும், ரயில்வே நிலையத்தின் சொத்துக்கு நாசம் ஏற்படுத்தியும் அடாத செயலில் மாணவர் கூட்டமொன்று ஈடுபட்டதாகத் தெரிய வருகிறது. மால்வாய் ரயில்வே நிலையத்தையும் இம்மாணவர் கூட்டத்தினர் தாக்கியிருக்கிறார்கள்.

இந்தச் செயலால் டிரைவர் உட்பட 6 பேர் பலத்த காயங்களுக்குள்ளாகினர். ரயிலின் கண்ணாடிகளும், கதவுகளும் நொறுக்கப்பட்டன.

இச்சம்பவம் எதனால் ஏற்பட்டது என்பது பற்றிய விபரம் இன்னும் பூர்வாங்கமாகக் கிடைக்கவில்லை.

குடகு த[illegible]லட்சுமியின் தகிடுதத்தம் அம்பல[illegible]!

மற்றவரைப் போலத்[illegible] உண்கிறார்; அருந்துகிற[illegible]; செரிமானம் செய்கிறார்!

பசி தாங்காமல் மூன்றும் நாள் தன் இச்சையாகக் 'காபி' கேட்டார்!

உலகை வய்க்க எத்தரும் பித்தரும் மேற்கொண்ட பித்தலாட்டம்!

பெங்களூர், நவ. 13—

"யாருக்கும் தெரியாமல், குடகு தனலட்சுமி, இரகசியமாகச் சாப்பிட்டுக்கொண்டும், தண்ணீர் குடித்துக்கொண்டும் இருந்திருக்கவேண்டும் என்றே நாங்கள் கருதுகிறோம; மாதக் கணக்கில் அன்ன ஆகாரமில்லா திருந்திருக்கிறார் என்ற பிரச்சாரம, ஏதோ சுயநலத்திற்காகச் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றே எங்களுக்குத் தோன்றுகிறது."

"பரிசோதனைக்கு அனுமதிக்கப்பட்ட 24 மணி அல்லது 48 மணி நேரத்திற்குள் பட்டினியின் அறிகுறிகள் அப்பெண்ணிடம் காணப்பட்டன. ஒரு நாளைக்கு ஒரு ராத்தல் முதல் 2 ராத்தல் வரை கனமும் குறையத் தொடங்கியது."

"மூன்றும் நாள் காலை, 7 அல்லது 8 அவுன்ஸ் தண்ணீர் குடித்தார்; காபி அருந்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதினாலேயே காபியை சுலபமாகக் குடித்தார்; பின்னர், அப்பெண் உணவு கேட்டார்; காலையிலும், மாலையிலும் சாப்பாடு கொடுத்தோம். இப்போது சாதாரணமாக உணவு உட்கொள்ளுகிறார்."

"டாக்டரின் அனுமதியின்றி அப்பெண்ணினுடைய பெற்றோர்கள் வார்டுக்குள் நுழையக் கூடாதென அறிவித்தபோது, அவர்கள் அதிருப்தி தெரிவித்தார்கள். இதிலிருந்து அவர்களின 'மர்மம்' தெரிகிறது."

"அப்பெண்ணை ஓர் அறையில் போட்டு இவ்வளவு கடுமையாகசோதனை செய்யாவிடில் உண்மை வெளியாகி இராது."

—இவ்வாறு, டாக்டர் ரெட்டி, குடகு தனலட்சுமி பற்றி கூறினார்.

பசி, தாகம் இல்லாத பெண் என்று வர்ணிக்கப்பட்ட குடகு தனலட்சுமி பலத்த பரிசோதனைக்காளாகிய பின்னர்தான் [illegible]ண்மை அம்பலமாக்கப்பட்[illegible]. அதன் விபரம்தான் [illegible]ல தரப்பட்டிருப்பது.

த[illegible]சுமி, குடகு காப்பித் தோட்டம்[illegible] துணை மேலாளராக உள்ள கே. [illegible] என்பவரின் ஒ[illegible] குழந்தை. தன் வீட்டில் தனலட்சுமியே எஜமானியாதலால், அப்பெண் சொன்னதையே பெற்றோர்கள் நம்பி யிருக்கக்கூடுமெனக் கருதப்படுகிறது.

ஹாதியானாவில் எம். எல். ஏ.க்களின் அறப்போர்

20 பேர் கைது

ஹாதியானா, நவ. 13—

மத்திய சட்டசபை மெம்பர் அமர்நாத் வித்யாலங்கர், பஞ்சாப் சட்டசபை மெம்பர் சீதாதேவி முதலிய 20 பேர் நேற்று போலீசாரால் கைது செய்யப்பட்டனர். நகரின் பஸ் போக்குவரத்து கம்பெனி கட்டிடத்தின் முன் மறியல் செய்தனராம்.

தற்கொலை செய்துகொள்ள முயன்றதாக அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்திய வர்த்தகத்திற்கு

கல்கத்தா, நவ 14—

இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகம் இப்போது நல்ல நிலைமையில் இருந்து வருகிறது. ஆகஸ்டு மாதத்திய ஏற்றுமதி எண்ணிக்கை ரூ 20 25 கோடி; செப்டம்பரில் ரூ 28 61 கோடியாக உயர்ந்திருக்கிறது.

பாரிஸ், நவ. 14—

பிரான்சில் இவ்வாண்டில் 8 லட்சம் குழந்தைகள் பிறந்திருக்கும் என மதிப்பிடப் பட்டிருக்கிறது.

எண்ணிக்கை கூடுகிறதாம்! நேருவும் இனி தலையிடமாட்டாராம்!

ஆச்சாரியார் எதிர்முகாம் உறுப்பினர் தரும் தகவல்

சென்னை, நவ. 12—

சென்னை முதல்வர் ஆச்சாரியாருக்கு எதிராகக் கையெழுத்து சேகரிக்கும் பிரமுகர் ஒருவரை ஒரு பத்திரிகை நிருபர் சந்தித்து எதிர்ப்பு இயக்கம் பற்றி விசாரித்ததில், கையெழுத்து 80-க்கு மேல் சேகரிக்கப்பட்டு விட்டதாகவும், நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருவதாகவும, கூறினார்.

பெருவாரியான உறுப்பினர்கள் ஆச்சாரியார் விலகவேண்டுமென்று விரும்பினால், நேருவும் மேலிடத்துக் காங்கிரஸ்காரரும் அதில் தலையிடமாட்டார்கள் என்று அவர் சொன்னார்.

வரப்போகும் தேர்தலில் முஸ்லீம் லீகை முறியடிக்க, அவாமி லீக், ஐக்கிய முன்னணியை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணுதுரை

சென்னை : 14—11—1953 சனி

பகலை இரவெனும் பாதகர்!

மக்களின் அறி ாமையினடியாகவே அற்புதங்கள் நிகழ்கின்றன. உலகம் தோன்றிய காலந்தொட்டு, மனிதனின் விசாரனை அல்லது அறிந்துகொள்ளும் உள்ளக்கிடக்கை இடையருது பணி புரிந்துவந்திருக்கிறது. வயிற்றின் இயல்பு, பசியைத் தூண்டுதல் மூளையின் இயல்பு, பசியாற வழிவகை காண முயல்வதோடு மேலும் மேலும் ஐம்புலன்கள் வழி உணரும் பொருட்கள் குறித்து, மேலும், மேலும் உண்மையை அறிய அவாவும், பணியும் அடங்கி இருக்கிறது. இது அனுபவ உண்மை.

மக்கள் கடந்துவந்த விசாரனை பாதை அல்லது அறிவு பெறும் பாதையில் பல மைல் கற்கள் உண்டு. இதுபோலவே பல இடைஞ்சல்களும் உண்டு. இன்னல் பல ஏற்றுத்தான், இறுதியில் அணுவைக் கூறுகளாக்கும் உயர்ந்த அறிவை மனிதக் கூட்டம் பெற்றிருக்கிறது.

ஒரு காலத்தில் அற்புதமாக இருந்தவைகள், உற்று நோக்கல்; உள்ளதை நுணுகி நுணுகி ஆராய்தல் என்ற இரு முறைகளால், ஒரு காலத்து அற்புதங்கள் அடுத்த காலத்து மூட நம்பிக்கையாக மெய்ப்பிக்கப்பட்டு வந்துள்ளன. ஏதோ ஒரு சம்பவம், நிகழ்ச்சி, தினம் தினம் நாம் காணும் சம்பவங்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் மாறுபட்டனவாக இருந்து விட்டால், அதை அற்புதம், தெய்வத் திருவிளையாடல் என்று அறிவு படைத்த எத்தர்கள் கூறத் தொடங்கி விடுகின்றனர். மக்கள் அறிவு பெறுவதால், தங்கள் ஆதிக்கத்திற்கு ஆபத்து வருமே என்ற பயவஞ்சகத்தோடு, மூதற் கண் உடனடியாக அறிவுக்குப் புலனுகாத சில பல சம்பவங்களை, தெய்வ சங்கல்பம் என்று பொய்யினை மெய்போல் பிதற்றுகின்றனர். இதைக் கண்ட பெரும்பாலான மக்களும், சிறந்த அறிவு படைத்தவர்களாக இருந்த போதிலும், ஒவ்வொன்றையும் ஆராய்ந்து அறிய அவசியமும், அவகாசமும், பயிற்சியும் இல்லாத காரணத்தாலும், பழங்கால மூடத் தத்துவங்களின் அழுத்தமான பிடியில் இருந்து இன்னமும் விடுபடாத காரணத்தினாலும், முன்கூறிய சுரண்டும் எத்தர்களின், பித்தலாட்டப் பேச்சில் மயங்குகின்றனர்.

அறிவை, செலுத்திப் பார்க்கவேண்டிய துறைகளில் எல்லாம் செலுத்திப் பார்க்காமல், விசாரனையை நன்கு பய படுத்த வேண்டிய வகைகளில் எல்லாம் பயன் படுத் மல், எதை, எத்தர்கள் கூறினாலும், அனைத்தையும் படியே நம்பி நடக்கும் சதிச்செயலுக்குப் பலியாகி வி ா.

இந்தப் பிடியின் காரண செங்கலும் பிடாரியாயிற்று! சாணி உருண் ல தெய்வமாயிற்று எதற்கெடுத்தாலும் 'ராம என்று உச்சரிக்கும்! தாசர் புத்தி தலைக்கேற் பிறகாட்டு அறிவியல் தாக்குதல் நல்ல பல . கொடுத்திருந்த போதிலும், கோரிய அளவுக் யுறவாகவே இருந்துவிட்டது.

கோ பட்டனும் அர்ச்சகனும் மட்டுமே, மக்களை அறி யிலேயே ஆழ்த்திவைக்கும் போக்கு மற்ற நாடு ால இன்றும் உண்டு. மற்ற நாடுகளில் இல்லாத விசித்திரம் அதுவும் வேதனை தரக்கூடிய போக்கில் இத்துறையில், இங்கு, இன்றும் இருந்து வருகிறது. இங்கு மக்கள் படைப்பில் ஒரு சிறு கூட்டமே, மக்களின் அறிவுக் கண்களை ஊனமாக்கியும், அறிவொளி காணுமல் பாதுகாத்தும் கொடுவினை புரிந்துவரும் அவலட்சணம் இங்குதான் இருக்கிறது. அறிவின் தூதுவர்களாக இருக்கத்தக்க அறிவுபடைத்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற அவர்கள், இத்துறையில் சுயலாபம் கருதி எத்தர் கூட்டமாக இருந்து வருகிறார்கள். என்று மாறுவரோ? மனந்திருபுவரோ அவர்?

ஆண் பனையைப் பெண் பனையாக்கின அற்புதம், நரியைப் பரியாக்கின வித்தை, வெள்ளத்தை ஏடு எதிர்த்துப் போன ஏமாற்று, முதலை உண்ட பாலன் மீண்டது, எலும்புக் கூடு பெண்ணுரு கொண்டது, சாகாவரம் பெற்று என்றும் சிரஞ்சீவிகளாக சிலர் இருப்பதாகக் கூறும் பித்தலாட்டம், ஆகிய அனைத்தும் ஆண்டவன் பெயரோடு இணைக்கப்பட்டு ஏற்றிப் போற்றப்படுகிறது. இத்தகையதோர் அற்புதங்களை நம்பிக்கிடக்கும் காலக கட்டம் ஒன்று எல்லா நாடுகளுக்கும் ஏற்பட்டதுண்டு. அந்தக் காலம் போய், சில நூறு ஆண்டுகள் கழிந்துவிட்டன. அங்கெல்லாம் புதிய அறிவொளியும், விஞ்ஞானக கண்ணேக்கும் பெற்றுள்ள மக்கள் ஏராளம். எத்தர்கள் கூட்டம் குறைவு. அதுவும் நாளாவட்டத்தில் அருகி வருகிறது.

இந்தத் தொல்லை தரும் நாட்டில்தான், மதத் தரகர் மனஉளம் கொண்டவர்கள், அறிவேந்தி வரும் ஏடுகளின் கர்த்தாக்களாக உள்ளனர். அவர்கள் ஆதிக்கம் அதிகம் கேடு பயக்கும் கருவிகளாக, அவர்களிடம் ஏடுகள் உள்ளன. இந்த நிலை புரட்சிகரமான மாற்றம் பெற்றாக வேண்டும்.

குடகு தனலட்சுமி உண்ணுதகை, வேண்டுமென்றே செய்த பித்தலாட்டம். உண்ணுவதில்லை; நீர் கொள்ளுவதில்லை, பதினெட்டுத் திங்களாக என்ற பித்தலாட்டச் செய்திக்கு நல்ல விளம்பரம் கொடுத்தவர், இந்த ஏடேந்திகள்!

இராஜமஹேந்திர புரத்தில் உள்ள இராமகிருஷ்ண மடத்து ஈவின கடவுளைத் தம்பிரான் ஒருவர், 'இந்து' இதழில், தனலட்சுமியின் பூர்வ ஜன்ம மகாகோலம் பற்றி முடங்கல் ஒன்று தீட்டினர். சுல நாளைக்குமுன்.

'.... க முழியில் செய்த சுயாமம், பசியைப் போக்கும்' என்று, பதஞ்சலி யோக சாஸ்திரத்திலிருந்து குடகு! பெண்ணின் மனமறிந்தப் பித்தலாட்டச் செயலுக்கு ஆதாரங்காட்டி வாதிட்டார்.

'முற்பிறப்புகளில் திரும்பத் திரும்பச் செய்த ஆத்மப் பயிற்சியின் பயனுகத்தான் குடகுப் பெண் உணவை, வெறுக்கிறது' என்று பட்டப்பகலை இரவென்று மடைமைக்குச் சேவை செய்தார்,

'அப்பெண்ணை மருத்துவச் சிகிச்சைக்கு உள்ளாக்கித் தொல்லை தர வேண்டாம்,' என்ற இதோபதேசத்தையும் அந்தத் தம்பிரான் செய்துவிட்டார்.

இருந்தாலும், பெங்களூர் மருத்துவ நிலையத்தார், யூனியன் சர்க்கார் கட்டளைக்கிணங்க, குடகு தனலட்சுமியை, கட்டுக்காவலோடு கண்காணித்துச் சோதித்தனர். 18 திங்களாக உண்ணுவதில்லை என்று உலகை ஏமாற்றிவந்த அம்மை, மூன்றும் நாளே, 'காப்பி கொடுங்கள்,' என்று கேட்கத் துணிந்துவிட்டார். 18 திங்களாகப் பசி தாங்கிய அம்மையின் வயிறு, மூன்று நாள் பசியைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை! சோறு, நீர் எல்லாம் இப்பொழுது தேவைப்படுகிறது, அற்புத அம்மைக்கு! செரிமானமும் ஆகிறது! இளைத்த உடல், நிறையில் கூடுகிறது!

இந்தச் சிறுமியின் அற் தப்பித்தலாட்டத்தை அம்பலப் படுத்த யூனியன் சர்க்கார் ரூ. 1200 செலவிட ஒதுக்கியது. இந்தத் தொகை ஒன்றுதான், மக்கள் உண்மை அறிவு பெறுவதற்கு, நல்ல முறையில் பயனளித்து இருக்கிறது.

அற்புதம் பேசினவர் முகத்தில் உயர்ந்த 'ஜப்பான்' வாங்கி பூசி இருக்கிறார்கள், மைசூர் சர்க்கார் மருத்துவர்கள். பாராட்டுகிறோம் அவர்களை, ஏடேந்திய எத்தர்களின் செயலுக்கு வருந்துகிறோம்.

அண்ணுதுரை—நகைச்சுவை அரசு—பி. பாலசுப்பிரமணியம் சிறையில் சந்திப்பு

சிறையிலிருக்கும் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்களை நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன், 'சண்டே அப்சர்வர்' ஆசிரியர் பி. பாலசுப்ரமணியம் ஆகியோர் நேற்று சிறையில் சந்தித்துப் பேசினர்.

பொன்மலை பராங்குசம் — திராவிடப் பண்ணை முத்துகிருஷ்ணன் சந்திப்பு

பொன்மலை தோழர் பராங்குசம், திராவிடப் பண்ணை முத்துக்கிருட்டிணன் ஆகியோரும் நேற்று பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்களை சிறையில் சந்தித்து உரையாடினர். அண்ணுதுரை அவர்கள் உற்சாகமாகவே இருப்பதாகவும், கழகத் தோழர்களின் அமைதியான நடவடிக்கைகள் குறித்து அவர் மகிழ்ச்சியடைந்ததாகவும் கூறினர். (13—11—53)

பொதுக் கூட்டங்கள்

15—11—53 ஞாயிறு மாலை கரூரில் தோழியர் பூங்கோதையும், தோழர் வி. சிவப்பிரகாசமும் பேசுவர். தோழர் பூசப் தலைமை வகிப்பார்.

• • •

15—11—53 ஞாயிறு மாலை சென்னை டவிபக்தோப்பு டவுடன் மில்ஸ் சாலையில் தோழர் கேசவன் தலைமையில், தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, எம். எல் ஏ., முரவை ஆர். எஸ். பாண்டியன் பேசுவர்.

திருச்சி தி. மு. தோழர்கள் வழக்கு

9-வது வாய்தாவாக ஒத்திபோடப்பட்டது

திருச்சி, நவ 4—

7—6—53-ல், திருச்சி மலைக் கோட்டையில் பறந்து கொண்டிருந்த தி. மு. கழகக் கொடிகளை, அப்பகுதியில் உள் தேசியத் தோழர்கள் மக்கி — கிழித்து — தீயிட்டு கழகத் தோழர்களைத் தா ம், நடைபெற்ற சம்பவம் ம்பந்தமாக தோழர்கள்: சு ருணகிரி, டி எம். ரத்தினம் மற்றும் மலைக் கோட்டை தி .க. கிளைக் கழக உறுப்பினர்கள் மீதும், திருச்சி நகர போல ர், எம். சி. பி. ஆக்ட், 75 விதிப்படி வழக்கு பதிவு ய்து, அவ்வழக்கு திருச் (ஸ்பெஷல்) டவுன் மாஜிஸ்திரேட் கோர்ட் முதலாவதாக 26-8-53-ல் ரிக்கப்பட்டு, 11-11-53-ல் எட்டாவது வாய்தா போட்டு, எவ்விதக் காரணமும் கூறுது, வழக்கை ஒன்பதாவது வாய்தாவாக 18—11—53-க் தேதிக்கு ஒத்திவைத்துள்ளார்கள்.

மற்றும், கல்லக்குடி அறப்போரில் ஈடுபட்டு 3 மாத சிறை தண்டனை அனுபவித்து விட்டு வெளிவந்தவர்களும், மேற்படி மலைக்கோட்டை வழக்கில் சம்பந்தப்படுத்தி உள்ளவர்களுமான தோழர்கள்: டி. எம். ரத்தினம் —டி. எ. கமலன் இருவரை மட்டும் தனியாக விசாரனை செய்து அவர்கள் வழக்கை 25-11-53-க் தேதிக்கும், திருச்சியில் ஆச்சாரியார் சுற்றுப் பயணத்தின்போது, எவ்விதக் காரணமுமின்றி கழகத் தோழர்கள் அறுவர்மீது தொடர்ந்துள்ள வழக்கையும், 14—11—53க் தேதிக்கு மாற்றியுள்ளார்கள்.

தோழர்களோ, கழகமோ, பணவசதி உடையதல்ல; நீதியின் வேகம் ஆமை வேகத்தில் உள்ளது.

தூத்துக்குடி வழக்கு நிதி

முன் தொடர்ச்சி ரூ. 2,206-13—7

தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்கள் மூலம் வசூல் :—

சிவகங்கை தி மு. கழகக் கூட்ட வசூல்	7—3—0
தேனி பெரியசாமி (திராவிடச் செய்தி மன்றம்)	6—4—0
வல்லவராயன்பட்டி தி. மு. கழகம்	1—0—0
அல்லிநகரம் தி. மு. கழகம்	4—4—0
குன்னூர் தி. மு. கழகம்	1—3—3
வீரபாண்டி தி. மு. கழகம்	1—0—0
தேனி பொதுக்கூட்ட உண்டி வசூல்	14—5—6
,, நாடார் சரஸ்வதி உயர்நிலைப்பள்ளி தி.மாணவர்கள்	1—9—3
,, சோ. வெற்றியரசு	1—0—0
,, பொதுக்கூட்டத்தில் மாலை ஏலம் போட்டது	2-12—0
,, நாராயணசாமி	1—0—0
,, பி. துரைசாமி	1—0—0
,, தி. மு. கழக அனுதாபி	1—0—0
சிலியம்பட்டி வெள்ளைச்சாமி	1—0—0
,, மீரா	1—0—0
,, தி மு. கழகம்	2—8—0
,, பொன்னையா	3—0—0
,, தி. மு. கழக பொதுக்கூட்ட உண்டி வசூல்	4-13—6
,, மாலை ஏலத்தில் விட்டதில்	2—4—0
ஓடைப்பட்டி தி மு கழகம்	10—0—0
ராசிபுரம் தி. மு. கழக பொதுக்கூட்ட உண்டி வசூல்	20—1—4
பெங்களூர்சிடி ராஜசிங்பேட்டை	
,, சி. ஆர். லட்சுமணன்	5—0—0
,, வெள்ளையப்பன்	1—0—0
,, தண்டபாணி	1—0—0
,, சின்னையன்	1—0—0
,, முத்துசாமி	1—0—0
,, கணேசன்	1—0—0
,, பெரியார் நகர் தி. மு. கழகம்	20—0—0
,, ,, என். வரதராசன்	5—0—0
,, ,, பி. என். பெருமாள் குழந்தைக்கு நாகம்மாள் என பெயரிட்டதில் வசூல்	2—0—0
,, ,, தி மு. கழக கூட்ட வசூல்	27—9—0
,, ,, டாபீஸ்பேட்டை தோழர்	1—9—3
கம்பம்—புதுப்பட்டி பொதுக்கூட்ட உண்டிவசூலும், மாலை ஏலம்விடப்பட்டதும் வரவு	10—1—3
அனைப்பட்டி தி. மு. கழகம்	20—1—0
காமயகவுண்டன்பட்டி தி. மு. கழகம்	1—9—3
,, பி. பாண்டியன்	5—0—0
கம்பம் வி. ராமசாமி	5—0—0
,, தி. மு கழகம்	101—0—0
,, பூமாலை ஏலம் விட்டதில்	0-12—0
காதக்கோட்டை தி. மு. கழகம்	10—0—0
ஆகமொத்தம் ரூ.	2,514-11—2

'இந்து'க்கள்......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

படக்கூடும்.

பார்ப்பனர்கள், மற்ற ஜாதி இந்துக்களை ஆட்சி செய்து வருமளவும், ஒவ்வொரு நிலையிலும் ஜாதி ஒற்றுமை தடைப்பட்டுக் கொண்டு தான் இருக்கும், எல்லா ஜாதிக் காரர்களும் ஒன்று திரண்டு எதிர்த்தாலதான் பார்ப்பனர்களால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் எதேச்சாதிகார வகுப்புவாத சாம்ராஜ்யத்தை, தோல்வியுறச் செய்ய முடியும்.

[டில்லியிலிருந்து வெளிவரும் 'காரவான்' நவம்பர் இதழிலிருந்து மொழிபெயர்த்து உதவிய தோழர்கள் 'ஞானம்,' 'கௌதமன்' ஆகியோருக்கு நமது நன்றி. ....ர்.]

'இந்துக்கள்' என்ற கோஷம் எழுந்தது திராவிடரின் இன உணர்ச்சியை தடுக்கவேதான்

—(:)—

மனித இதயம் படைத்தவனை மதிக்கத் தெரியாதவர்கள் மணிமகுடம் சூடி வாழ திட்டமிட்டனர்

[டெல்லியிலிருந்து வெளிவரும் 'காரவான்' நவம்பர் இதழில் வெளியான "திராவிட இயக்கமும், வடநாடும்" என்று தோழர் ஜேகோப் எழுதிய கட்டுரையின் பிற்பகுதி கீழே தரப்பட்டுள்ளது. முற்பகுதி நவம்பர் 10-ந் தேதி "நம் நாடு" இதழில் பிரசுரமாகியுள்ளது.]

டாக்டர் ஹெட்ஜ்வார், 18-ம் நூற்றாண்டில் மகாராஷ்டிரத்தை ஆண்ட பீஷ்வாக்கள் என்ற பார்ப்பனர்களுக்குக் கிடைத்த அதிகாரத்தையும், கௌரவத்தையும், பொதுவாக மூவாயிரம் ஆண்டுகளாக இந்திய சரித்திரத்தில், பார்ப்பனர்கள், சமுதாய, அரசியல் துறைகளில் அனுபவித்து வந்த நிலையையும் எண்ணிப்பார்த்தார். ஜஸ்டிஸ் கட்சியின், 'மனிதனுக்கு மனிதன் சமம்; எல்லோரும் எல்லாத் துறைகளிலும் முன்னேற வசதி அளிக்கப்பட வேண்டும்,' என்பன போன்ற கொள்கைகளை, மத்திய, வடக்கு இந்தியாவிலே பார்ப்பனரல்லாத ஏனைய ஜாதி இந்துக்களும் உணரும்படியான நிலை ஏற்படுமாயின், பார்ப்பனர்கள், அரசியலிலும் சமுதாயத்திலும் அடைந்துள்ள சிறப்பு மண்மூடிப் போகும் என்று அஞ்சினர்.

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக்குக் கல்லறை கட்டி அதன் மீது மராட்டிய சாம்ராஜ்யம் அமைக்க வேண்டுமென்ற தன் கனவு நிறைவேறுவதற்கு தடையாக பார்ப்பனரல்லாதார் இயக்கம் அமையுமென்று அஞ்சினர்.

ஆகவே, தென்னாட்டில் வளர்ந்துள்ள இந்த இயக்கம், மத்திய வடக்கு இந்தியாவில் பரவாமல் தடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

பார்ப்பனரின் உயர்வு நிலைக்க வேண்டுமென்ற காரணத்தினால், 1924ல், "இந்துக்கள்" என்ற கோஷத்தைக் கூவி, பெருவாரியான பார்ப்பனர்கள் இரகசியமாக ராஷ்டிரீய சுயம் சேவா சங்கம் என்ற ஒரு கட்சியை ஏற்படுத்தினர். இந்தக் கட்சிக்குக் கொள்கைகள் எதுவும் வகுக்கப்பட்டு எழுதப்படவில்லை. சமீப காலம் வரையில் அப்படியே தான் இருந்து வந்தது. அதன் முக்கிய நோக்கம் தலைமைப் பதவியைப் பற்றியது. அதன் இரகசியமான ஒரே கொள்கை, எப்படியேனும், இந்துக்களையெல்லாம் ஒன்று திரட்டி, மராட்டியப் பார்ப்பனர்களின் உயர்வு நிலையைமீண்டும் ஏற்படுத்தி பார்ப்பன ஜாதியினரை இந்திய அரசியலில் முடி சூட்டி வைக்க வேண்டுமெனபது தான்.

டாக்டர் ஹெட்ஜ்வாரோடு நெருங்கிப் பழகிய ஒரு சில மராட்டியப் பார்ப்பனர்களை தவிர மற்றவர்களுக்கு இந்த சங்கம் எதற்காக உள்ளது என்பதே தெரியாது. நேருவின் ஆட்சியால்கூட இந்த சங்கத்தின் அங்கத்தினர்கள் யார்? இதன் பொருளாதார நிலை என்ன? என்பன போன்ற தேவையான விபரங்களை சேகரிக்க முடியாது. இதன் உண்மையான நோக்கம், பார்ப்பனக் கலாச்சாரமும் பார்ப்பனத் தலைமையும் ஓங்க வேண்டுமென்பது தான்.

டாக்டர் ஹெட்ஜ்வாருக்கும் ஆங்கிலேயருக்கும் எந்தவிதமான தகராறும் ஏற்பட்டதில்லை ஏனெனில், அவர் வெள்ளையருக்கு எதிராக நடந்த எந்தப் போராட்டத்திலும் கலந்துகொள்ளவில்லை. ஆர். எஸ். எஸ். காரர்கள். ஆங்கிலேயர்களின் பிரித்து ஆளும் கொள்கைக்கு ஒத்து நடந்துகொண்டதால் ஆங்கிலேயர்கள் இவர்களது காரியங்களில் தலையிடவில்லை. ஆர். எஸ். எஸ். காரர்களைப் பற்றிய முழு விவரமும் அடங்கிய கட்டுரை ஒன்று "டான்" (Dawn) பத்திரிகையில் வெளியாயிற்று.

"இந்துக்களை-ஜாதிப் பிரிவுகளையும் பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள் என்பதையும் ஒப்புக்கொண்டு—வாழும் வகை செய்தல் இயலாது என அறிந்த டாக்டர் ஹெட்ஜ்வார், முகம்மதியர்களை எதிரிகளாகக் காட்டி இந்துக்களை ஒன்று திரட்ட முயற்சித்தார். இதே காரணங்களுக்காக. இதே நோக்கங்களோடு வேறு சில மராட்டியப் பார்ப்பனர்களாலேயே, தோற்றுவிக்கப்பட்ட 'இந்து மகா சபை'யை ஆதரித்தனர். இந்து-முஸ்லீம் வேறுபாடு வளர்ந்து விட்டது. ஆனால், தலைமை பதவியைக் கைப்பற்றவேண்டும் என்ற எண்ணத்தைக் கைவிட்டுவிட்டனர்.

டாக்டர் ஹெட்ஜ் வார் இறந்த பிறகு, எம. எஸ் ஹோல்கார் தலைவரானார். 1947-ல், பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு ஆர். எஸ். எஸ். கட்சி மிகவும் வலுவடைந்து, இந்திய அரசியலில் சக்தி வாய்ந்த கட்சியென கருதும்படியான நிலையை அடைந்தது. சங்கம் எல்லா இந்து ஜாதியினரிடத்தும்தொடர்புகொண்டு அந்த தொடர்பைப் பாரதிய ஜன சங்கிற்கு மாற்றியது.

"ஆர். எஸ். எஸ், இந்து மகா சபை, மதவெறி பிடித்த இந்து சாங்கிரஸ் தலைவர்கள் ஆகியவர்களின் செயல்கள் — சிறுமதி படைத்த ஜாதி இந்துக்கள் கொண்ட முகமதியர் துவேஷம்—பிரித்து ஆளும் ஆங்கிலேயர் கொள்கை—1937 கூட்டு மந்திரி சபை ஏற்படுத்த காங்கிரஸ்காரர்கள தடையாக இருந்தது—ஆக இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து, ஜின்னாவின் கீழ் முகம்மதியர்கள் ஒன்றுபடவும், அதன் காரணமாக பாகிஸ்தான் ஏற்படவும் துணை செய்தன.

இந்து முஸ்லீம் சண்டை, ஜாதி தர்மத்தில் சொல்லியபடி, மற்ற மதத்தினரை மதிக்கும் தன்மை இல்லாது போனதன் விளைவுதான். ஒரு ஹரிஜனை மனித இதயம் படைத்தவன் என்று மதிக்கத் தெரியாத ஒரு ஜாதி [illegible]ற, மற்ற இனத்தவர்கள் [illegible]ப்பதை எங்ஙனம் பொறு[illegible]க்கொள்ளும்? இதை மறுக்க [illegible]ளைப்பவர்களைத் சுயவு செய்து [illegible] சுவாமி தர்ம தீர்த்தா எழுதிய "இந்து [illegible] ஆதிக்கத்தின் ப[illegible]ரம்" என்ற சிறந்த நூலைப் [illegible]ம் படியாகக் கேட்டுக் கொ[illegible]றேன்.

"இந்தி[illegible]த்திரமே, பார்ப்பனர்கள் [illegible]ற்றவர்களை தங்கள் ஆ[illegible]க்கத்தின் கீழ் வைத்திரு[illegible]தின் விவரம் என்றும், பா[illegible]ப்பனரல்லாத ஏனைய ஜா[illegible] இந்துக்கள் சிறிதும் சிந்[illegible] செய்யாது அடங்கி ந[illegible] தமையால் சிறை வாழ்வு வ[illegible] நேரிட்டது என்றும், [illegible] களிவாக விளக்கியிருக்கின்[illegible] என்? பார்ப்பனர்களின் [illegible] மிர் பிடித்த—சகித்துக் [illegible]ான்ளும் நெறி அற்ற-கொ[illegible]ம மிக்க தன்மைகளால் பு[illegible] மதம் இந்திய நாட்டை[illegible] விட்டே வெளியேற்றப்படவில்லையா?"

"காந்தியார் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட பின்பு தான், நாட்டு மக்கள் விழிப்படைந்தனர். சாதி செய்த சதி, காந்தியைக் கொன்றது. அந்த சாதி வெறியை ஊட்டியவர்கள் யாரென மக்கள் எண்ணினர். ஆர். எஸ். எஸ். என்ற இயக்கம், ஒரு பார்ப்பனத் தலைவராகக் கொண்டுள்ள ஒரு இரகசிய பயங்கர இயக்கம். அது தன் உடல் வலிமையினாலும், மூர்க்கத் தனத்தினாலும் இந்திய ஆட்சியைக் கைப்பற்ற முயற்சித்தது.

ஆனால், காந்தி கொலை செய்யப்பட்ட பின் கட்சி, கலைகலைந்து விட்டது. ஆனாலும், சங்கம், 'அகில பாரத் ஜன சங்கம்' என்ற உருவில் தலை தூக்கியது. அதுவும் என். பி முகர்ஜி அகால மரணம் எய்தவே, இந்தியாவின் ஆட்சியைக் கைப்பற்ற அது கொண்டிருந்த கனவுகள் நிறைவேறாமல் போயிற்று.

ஆர் எஸ் எஸ்., இந்து மகா சபை இயக்கங்களின் தலைவர்கள், மகாராஷ்டிர பார்ப்பனர்களாகவே இருந்தமையாயின், தலைமைப் பதவியில் மோகங்கொண்டு ஒரு சில ராஜஸ்தான் பார்ப்பனர்கள், பார்ப்பனர்களுக்கு ஆக்கம் தேட வேண்டுமென்ற நோக்கத்துடனே "ராம ராஜ்ய பரிஷத்" என்ற ஒரு கொடிய கட்சியைத் துவக்கினர். இராமாயண காலத்தில் நாட்டில் சீரும் சிறப்பும் ஏற்பட்டிருந்ததாகப் பொது மக்களிடத்தில் இவர்கள் கூறி வந்தனர்.

"ஆனல், சரித்திரமாணவர்கள், இராமாயண காலத்தில் நாட்டில் ஏற்பட்டிருந்த கேடுகளை நன்கு அறிவார்களானதால், 'ராம ராஜ்ய பரிஷத்' சங்கம் வட நாட்டில் வளம் பெற முடியவில்லை."

"பெரிதும் பயங்கரமானதொரு ஜாதி இயக்கம், ஜம்முவில், பிரஜா பரிஷத் கட்சியின் ஆதரவில் திரண்டது. அதன் தலைவர் பண்டிட் பிரம் நாத் டோக்ரா என்ற பார்ப்பனர். இவர், பார்ப்பனர்கள் நடத்தி வந்த இயக்கங்களினால் ஆத[illegible]க்கப்பட்டு வந்தார். இந்த [illegible]க்கம் இந்தியாவின் உ[illegible] இலட்சியங்களுக்கே ஒரு [illegible]ம் கேடாக அமைந்திரு[illegible]."

மக்கள் இம்[illegible]ான கழகங்களின் தன்மைக[illegible] கொண்டதால், இவைகள் [illegible]களாகவே அழிந்து போகும்[illegible]

ஆர். எஸ். எஸ்., இந்துமகா சபை, ராமராஜ்ய பரிஷித், பிரஜா பரிஷித் போன்ற கட்சிகளின் உண்மை நோக்கங்களையும், அச்சங்கங்களில் பார்ப்பனர்கள் செய்துவந்த காரியங்களையும் நன்கு அறிந்துகொண்ட தென்னிந்திய மக்கள், திராவிடஸ்தான் இயக்கத்தைப் பெரிதும் ஆதரிக்கத் தலைப்பட்டனர்.

மற்றும் ஒரு பாகிஸ்தான் தென்னாட்டில் ஏற்படுவதை தடுக்க வேண்டுமாயின், வட இந்திய மக்கள் இந்தச் சங்கங்களின் கொடூரமான செயல்களை மக்கள் உணரும்படி வெளிப்படுத்த வேண்டும்.

பார்ப்பனியம் ஒழிந்தாக வேண்டும்

இந்தியா சர்வதேச நாடுகளில் ஒன்றாக மதிக்கப்படுகிறது. ஆர். எஸ். எஸ். காரர்களும், மற்ற பார்ப்பன அரசியல் இயக்கங்க[illegible]ம் சுவற்றில் எழுதப்பட்டிருப்[illegible]களைப் பார்க்கவில்லையா [illegible] வேறொரு ராமசாமி நாயக்[illegible] நாட்டில் அவசியம் தோன்[illegible]திக் கொடுமைகளைக் குழிதோ[illegible]தைப்பார் என்பது திண்ணம்.

இவர்கள் அழிந்தபி[illegible]கால் நம் நாட்டில் ஒற்[illegible] ஜாதி சமப்புத் தன்மையும் ஏற்

(2 ம் பக்கம் பார்க்க)

"மன்றம்"
(திங்கள் இருமுறை)
கட்டுரை, கதைகளுடன் வெளிவரும் கருத்திதழ்
ஆண்டு சந்தா: ரூ. 6—0—0
6 மாதம் ரூ. 3—0—0
கீழ்கண்ட ஊர்களுக்கு முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் தேவை:—
செங்கற்பட்டு
காரைக்கால்
விருதுநகர்
கோவில்பட்டி
சங்கரன்கோவில்
சீர்காழி
அம்பாசமுத்திரம்
திண்டுக்கல்
கோபிச்செட்டிபாளையம்
கோலார் தங்கவயல்
ஏரல்
அம்மையப்பன்
பண்ருட்டி
மற்றும் விற்பனையாளர் இல்லாத ஊர்களிலும் விற்பனையாளர் தேவை.
விபரங்கட்கு,
நிர்வாகி, "மன்றம்,"
26, வைவிபப்பன் தெரு,
மண்ணடி — சென்னை.

"பல்கலைக் கழகங்கள் போர்க்களங்களாக மாறிவிட்டன"

பண்டிதர் நேரு 'நான்சென்ஸ்' போக்கை மாற்றிக்கொண்டாரா?

புதுடெல்லி, நவ. 14—அண்மையில் நடைபெறும் அகில இந்திய ஆதாரக் கல்வி மாநாட்டிற்கு பண்டித நேரு அனுப்பிய செய்தியில், கூறியுள்ளதாவது:—

"இன்று இந்தியாவில் உள்ளவர்கள் அநேகமாக ஒவ்வொருவருமே நம்முடைய தற்போதைய கல்வி முறையைப் பற்றி குறைகூறி வருகிறார்கள்

உண்மையில் தற்போதைய கல்வி முறையை சந்தேகிக்க வேண்டியதாக இருந்து வருகிறது.

பல்கலைக் கழகங்கள் போர்க்களங்களாக மாறி வருகின்றன. அங்கெல்லாம் செயற் குழுக்கள் பணியாற்றுகின்றன. பட்டினிப் போர்கள் துவங்கப்படுகின்றது.

பொதுவாக தொழில் துறை போன்றதொரு சூழ்நிலை நிலவி வருகிறது. தொழில் துறையில் தகராறு ஏற்படுவது விரும்பத்தக்கதல்ல. நமது கல்வி நிலையங்களையும் அந்த நிலைக்குக் கொண்டு வந்துவிடுமென்பது விந்தைக்குரிய செயலாகும். இந்நிலை ஏற்பட்டதற்காக மாணவர்களைக் கடிந்து பயனில்லை; ஆசிரியர்களைக் குறைகூறவும் கூடாது இம்மாதிரியான விளைவுகளை உருவாக்கும் கல்வி முறையில்தான் சிக்கல் உள்ளது என்று சொல்ல வேண்டும்.

நம்முடைய யுவர்களும், யுவதிகளும், வருங்கால முக்கியத்துவத்தை உணர்கின்றனரா; நாட்டின் நலனுக்கான சேவையில் தங்களின் பொறுப்பை அறிகின்றனரா என்றே நான் அடிக்கடி ஐயுறுகிறேன். இந்த உயர்ந்த எண்ணம் நம்மிடையே இல்லாது போனால் நாம் எப்படி வளரப் போகிறோம்? எவ்வாறு பெரிய நாட்டினராக ஆக முடியும்?

கல்வியானது, எவரும் குழந்தைகளின் ஆரம்ப ஆண்டுகளில் அமைக்கப்படும் அஸ்திவாரங்களையே ஆதாரமாகக் கொண்டதாகும். அந்த ஆரம்ப ஆண்டுகளில், முதல் 6 அல்லது 7 ஆண்டுகள் மிக முக்கிய மானவையாகும்.

ஆதாரக் கல்வி ஏழாவது வயதில் ஆரம்பமாகிற தென்றே நான் நினைக்கிறேன். அதுவும் இதைப்போலவே முக்கியமான காலமாகும். ஆதாரக் கல்வி போதனை சரியாக இல்லையென்றால் அதை அடுத்த அபிவிருத்திகளும் சரியாக இல்லையென்று தான் ஆகிறது. காரணத்தைத் தொடர்ந்த வினவு ஏற்படுகிறது.

நாடு முழுவதும் நல்ல முறையில் ஆதாரக் கல்விபள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு அதன்பின் அடுத்த படியான கல்வி போதிக்க கோடிக் கணக்கான ரூபாய் செலவாகுமெனச் சொல்லப் படுகிறது. இந்திய சர்க்காரின வருமானத்தையும் அச்செலவு விழுங்கிவிடும் என்று கூட சொல்லப்படுகிறது. அவ்வளவு பணம் நம்மிடமில்லை. எனினும் தற்போதைய வசதிகளைக் கொண்டே ஆதாரக் கல்விக்கான நல்ல முறைகளை வகுத்துக் கொள்வது அவ்வளவு கடினமல்ல என்றே நான் கருதுகிறேன்."

மதுரையில் நிதி நாடகம்

★

மதுரை வழக்கு நிதிக்காக 15—11—53 ஞாயிறு இரவு 10 மணிக்கு தோழர்கள் எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஜி. சக்கரபாணி, கே. ஏ. தங்கவேலு, ஜி சகுந்தலா நடிக்கும் 'இன்பக் கனவு' என்ற நாடகம் நடைபெறும்.

…கமெங்கும் ‘தூத்துக்குடி வாரம்’

★

தி. மு. கழகத் தலைமை நிலைய அறிக்கைக்கிணங்க, ‘தூத்துக்குடி வாரம்’ கொண்டாடி, அந்தக் கூட்டத்தில், “தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கக் கோரியும், அதில் சம்பந்தப்பட்டுள்ள தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யுமாறு சென்னைப் பிரதம மந்திரியைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றி அதை சென்னை முதல் அமைச்சர் ஆச்சாரியாருக்கு அனுப்பியும், தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் பெற்று; தூத்துக்குடி தோழர்களை விடுவிக்கக்கோரும் மனு ஒன்றை தயாரித்து, அதில் பொதுமக்களிடம் கையொப்பம் வாங்கி முதலமைச்சருக்கு அனுப்பியும் உள்ள கழகங்களின் பட்டியலும், நிகழ்ச்சியின் சுருக்கமும் கீழே தரப்பட்டுள்ளது. தீர்மானங்களும், கோரிக்கையும், கையொப்பத் தாளும் ஒரே நிகழ்ச்சியின் சம்பந்தப்பட்டவையாதலால், தீர்மானங்களைத் தவிர்த்து, கூட்ட நிகழ்ச்சிகளை மட்டும் பிரசுரித்துள்ளோம்.

தண்டையார்பேட்டை

8—11—53-ல், சென்னை 1-வது வட்டம், தண்டையார் பேட்டை தி. மு. கழக சார்பில், தூத்துக்குடி வாரக் கூட்டம், தோழர் ல. கண்ணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆர். ராமதாஸ், எஸ். பி. சம்பத், தன, கயல் அன்பன் முதலியோர் பேசினர்.

சென்னை (23வது வட்டம்)

7—11—53-ல், புரசை அன்னதான சமாஜத்தில், தூத்துக்குடி நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் ஆ. ச. சுந்தரமூர்த்தி தலைமை வகித்தார். அதுபோது, தோழர்கள் துரைராசன், வெற்றிபழகன், சாரதா, ஆர். எஸ். பாண்டியன், வி. எஸ். கோவிந்தராசன், நடிகமணி டி. வி. நாராயணசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை (40வது வட்டம்)

11—11—53-ல், சென்னை சேப்பாக்கம் தி. மு. கழக சார்பில், பார்த்தசாரதி நாயுடு தெருவில், “தூத்துக்குடி தின”ப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குத் தோழர் புரட்சி மணி தலைமை தாங்கினார். தோழர்கள் வெற்றிவீரன், வி. எஸ். கோவிந்தராசன், முகவை ஆர். எஸ். பாண்டியன், நடிகமணி டி. வி. நாராயணசாமி ஆகியோர் பேசினர்.

தூத்துக்குடி வழக்கு [illegible]காக, கூட்டத்தில் உண்[illegible] மூலம் ரு 16 வசூலாயி[illegible].

சோடம்பாக்

8—11[illegible]-ல், சென்னை [illegible]பாக்கம் 35-வது வட்ட தி. மு. கழக சார்பில், கழகக் கட்டிடத்தில் தோழர் கலைபழகன் தலைமையில் தூத்துக்குடி வாரப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தூத்துக்குடி சதி வழக்கைப் பற்றியும், அரசாங்கத்தின் நேர்மையற்ற போக்கைப் பற்றியும் கண்டித்து தோழர்கள்: சா. கணேசன், கோ. க. புவியரசு, கோ. வெ கௌரிசங்கர், செ. கிருட்டினமூர்த்தி ஆகியோர் பேசினர்.

ஆலந்தூர்

8—11—53-ல், ஆலந்தூர் தி. மு. கழக சார்பில், தூத்துக்குடி வாரக் கூட்டம், தோழர் இர. கோதண்டராமன் தலைமையில் கூடியது. அதுபோது, தோழர்கள்: மு. தங்கவேலர், ப. திருநாவுக்கரசு மற்றும் பல உறுப்பினர்கள் சொற்பொழிவாற்றினர்.

ஆத்தூர் (சேலம்)

7—11—53 மாலை 7 மணிக்கு ஆத்தூர் தி. மு கழக சார்பில், தோழர் என். கைலாசம் தலைமையில் தூத்துக்குடி நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது அவ்வமயம் தோழர்கள்: எம். பி. சுப்ரமண்யம், பி. ஏ., எம் எல். ஏ., கவிஞர் கண்ணதாசன் ஆகியோர் தூத்துக்குடி வழக்கு நிலவரத்தைப் பற்றியும், மும்முனைப் போராட்டம் குறித்தும் பேசினர்.

தோழர் எம் பி. சுப்பிரமணியும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“போராட்டத்திலே (1942) கலந்துகொள்ள தைரியமில்லாத ஆச்சாரியார், எங்கள் போராட்டத்தைக் குறை கூறுவது கேலிக்கு இடமாகும். தமிழர், ஆதி முதலே நாகரிகத்தில் சிறந்தவர்கள் என்று, “நான் கண்ட இந்தியாவில்” நேரு எழுதியுள்ளார்; ஆனல், தற்பொழுது காட்டுமிராண்டிகள் எனக் கூறுகின்றார். இதுபோன்ற பேச்சுக்களை குடங்கை பாலு விபூதி வீரமுத்து போன்றோர் கூறுவதாகும்,” என்று கூறிவிட்டு, தூத்துக்குடி வழக்கை விவரித்தார். அடுத்து, தோழர் கண்ணதாசன் அவர்கள், நீண்ட நேரம் பேசுகையில், கூறிய தாவது:—

“சதி என்பது திட்டமிட்டு செய்யும் காரியமாகும். நாங்கள் சதி செய்கிறவர்கள் என்பதற்கு ஓர் ஏது எடுத்துக் காட்ட ஆச்சாரியார் அவர்களால் காட்ட முடியுமா?

ஹைகோர்ட் யாருக்கும் அடங்கியதல்ல; அநேக சதி வழக்குகளிலே சர்க்கார் தோற்றுள்ளது; தோழர் ஏ. கே. கோபாலன் வழக்கிலே சர்க்கார் [illegible] கப்பட்டது. எங்கள் தூ[illegible]குடி வழக்கிலே ஆச்[illegible]யார் மூக்கறுவது நிச்சய[illegible] எனக் கூறிவிட்டு, கா[illegible] திட்டங்களை விளக்கினார்

[illegible]லை, தூத்துக்குடி நிதிக்கு ரு. 7—10—3 [illegible]யல் மூலம் வசூல் ஆயிற்று.

அன்னதானப்பட்டி

5—11—53-ல், சேலம் அன்னதானப்பட்டி தி. மு கழக ஆதரவில், தூத்துக்குடி நாள் பொதுக்கூட்டம் தோழர் இ. ஆர். கிருஷ்ணன் தலைமையில நடைபெற்றது. தோழர்கள்: வி. சிவப்பிரகாசம், பி. ஏ., கவிஞர் கண்ணதாசன் ஆகியோர், தூத்துக்குடி சதி வழக்கில் காவலிலிருக்கும் தோழர்களின் நிலை குறித்தும், குறிப்பாக இவ்வழக்கிற்கு அவசியம் நிதி அளிப்பது, நீதியை நிலைநாட்ட வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்திப் பேசினர். கூட்டத்தில் வழக்கு நிதிக்காக ரு 17—10—0 வசூல் ஆயிற்று.

சலகண்டபுரம்

8—11—53-ல், திரு. வி. க திடலில், தி. மு கழகச் சார்பில், தூத்துக்குடி நாள் பொதுக்கூட்டம் தோழர் பி பி. பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கண்ணதாசன், ப. கண்ணன், த. க. குருநாதன், ப. கிருட்டிணன், ப. செல்லப்பன், அன்புக்கரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அம்மாப்பேட்டை

6—11—53-ல், சித்தேஸ்வரா டாக்கீசுக்கு எதிரில் உள்ள மைதானத்தில், தோழர் எஸ். எ. அன்புக்கரசு தலைமையில் தூத்துக்குடி நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள்: சிற்றரசு சுப்ரமணியம், எச். வி. சீனிவாசன் குழுவினரால் “பகுத்தறிவு கலை நிகழ்ச்சி” நடைபெற்றது.

தோழர்கள்: கவிஞர் கண்ணதாசன், பழனி, அ. தமிழரசு ஆகிய தோழர்கள் பேசினர்.

கிருஷ்ணகிரி

2—11—53-ல், கார்னேஷன் மைதானத்தில், தி. மு. கழக சார்பில் தூத்துக்குடி தினம் தோழர் என். நாராயணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள்: ஆர். வெங்கடாசலம், வேணு, கோவிந்தராஜ் ஆகியோர் பேசினர்.

சேலம்

5—11—53 மாலை 6 மணிக்கு, அன்னதானப்பட்டி (சேலம்) தி. மு. கழகத்தின் சார்பில், தூத்துக்குடி நாள் பொதுக்கூட்டம் தோழர் இ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது தோழர்கள்: கே. எ. [illegible] வி. சிவப்பிரகாசம், [illegible], கவிஞர் கண்ணதாசன் [illegible]யோர்

காஞ்சிபுரம்

“தூத்துக்குடி வ[illegible]க்கை வாபஸ் வாங்[illegible] அதில் [illegible]ம்பந்தப் பட்டுள்ளவர்களை வி[illegible]ல செய்யக் கோரி கீழ்க்[illegible] கிளைக் கழகங்களிலிருந்து [illegible] தலைமைச் சர் ஆச்சாரியாருக்கு[illegible] பொது மக்களிடமிருந்து கை[illegible]யொப்பங்கள் வாங்கி அனுப்பப்[illegible]டிருக்கிறது மொத்தம் 5000 கையொப்பங்கள் வாங்கப்பட்டிரு[illegible]க்றது.

தி. மு கழ[illegible] கிளைக் கழகங்களான, பன்னீ[illegible]ல்வம் படிப்பகம்; பகுத்த[illegible] கழகம்; வேலாயுதம் படிப்[illegible]கம்; பாண்டியன் நினைவு ம[illegible]ம்; மஜீத் நினைவு மன்றம்; [illegible]ரங்கசாமி நினைவு மன்றம் [illegible]ண்முகம் நினைவு மன்றம்; ச[illegible]தித் படிப்பகம்; மறுமலர்[illegible] கழகம்; அறிவு வளர்ச்சிக் [illegible]கம்; சிந்தனையாளர் கழக[illegible] அழகிரி நினைவு மன்றம்; [illegible]ப் பாளையத் தெரு, தி. மு [illegible] கிளை; தியாகராயர் மன்றம் ஆகியன.

* * *

வேலாயுதம் படிப்பகத்தின் உறுப்பினர் கூட்டம் தோழர் சடையாண்டி தலைமையில் கூடி, தூத்துக்குடி நாள் தீர்மானங்களை நிறைவேற்றியது.

அருப்புக்கோட்டை

27—10—53ல், தூத்துக்குடி நாள் கூட்டம் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்றது என, தோழர் பி எம். சின்னசாமி அறிவித்துள்ளார்.

* * *

5—11—53ல், இவ்வூர் சவுந்திர பாண்டியனார் நினைவுப் படிப்பகத்தின் சார்பில், தூத்துக்குடி நாள் கொண்டாட்டம் தோழர் இன்மொழி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பி பி. என நல்லதம்பி, பி சி. பிச்சை, வி. பி. ரத்தினம் ஆகியோர் பேசினர்.

தாமரைக்குளம்

8—11—53ல், தி. மு கழகச்

கழகக் கூட்டங்கள்

★

கள்ளக்குறிச்சி

15—11—53 ஞாயிறு மாலை 6 மணிக்கு

தலைவர்: ஏ. கந்தசாமி

பேசுவோர்:

ஏ. கே. சீத்தாபதி

ம. பொன்னம்பலம்

சிற்றரசு ஏ சுப்ரமணியம்

★

லால்குடி

15—11—53 ஞாயிறு மாலை 6 மணிக்கு

இடம்: சிவன் கோவில் முன்பு

தலைவர்: எல். எர். தங்கராசன்

பேசுபவர்:

தோழியர் அருண்மொழி

★

தஞ்சூர்

18—11—53 புதன் மாலை 6 மணிக்கு

தலைவர்: தோழர் மூக்கன்

பேசுவோர்:

ம. பொன்னம்பலம்

சிற்றரசு ஏ சுப்ரமணியம்

செயற் குழுக் கூட்டம் தோழர் டி. கே திராவிடமணி, “புரட்சிப் பாசறை”யில் நடைபெற்றது தோழர் டி. கே. எஸ். சுந்தரம் தலைமையில் தூத்துக்குடி நாள் நடைபெற்றது.

மன்னார்குடி

8—11—53ல், தி. மு. கழகச் சார்பில் தோழர் இர. கணேசன் தலைமையில் தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வி என். சோமசுந்தரம், ப. நாராயணசாமி ஆகியோர் பேசினர்.

கருகம்புத்தூர்

5—11—53ல, தி. மு. கழகச் சார்பில் டாக்டர் தோழர் ப. வேதாந்தம் தலைமையில் தூத்துக்குடி நாள் நடைபெற்றது. அதுபோது, க. நெடுஞ்சேழன், துரை, வே. ச. பாண்டியன், செல்வம், அ. கருத்தோவியன் மற்றும் பலர் பேசினர்.

மதுராந்தகம்

9—11—53ல், தூத்துக்குடி சதி வழக்கைக் கண்டித்து நூவலூர் தி. மு. கழகச் சார்பாக சென்னைப் பிரதமருக்கு தந்தி அனுப்பப்பட்டிருக்கிறது.

உதகை

8—11—53ல், தி. மு. கழகச் சார்பில, போஸ் மைதானத்தில், தோழர் பே. ஆறுமுகம் தலைமையில் தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கே. எம். தங்கவேலு, வி. சண்முகநாதன் பி.ஏ., கோதண்டராமன் ஆகியோர் பேசினர்.

பெங்களூரில் தோழர் ஏ. கோவிந்தசாமி

பெங்களூர், நவ. 13—

8—11—53 ஞாயிறு மாலை 6 மணிக்கு சிக்கலால் பார்க்கில், தோழர் சி. என். சாமி அவர்களின் தலைமையில் அக்கிப்பேட்டை தி. மு. கழக நான்காவது ஆண்டு விழா நடைபெற்றது. அதுபோது தோழர்கள் மு. சி. வேணு, ஆர். பி. வீ இராமன், கே. வி. கே. இராமசாமி ஆகியோர் பேசிய பின்னர், தோழர் ஏ கோவிந்தசாமி எம்.எல்.ஏ., அவர்கள் தி மு. கழகத்தின் அடிப்படைத் திட்டங்களையும், கல்லக்குடி போராட்டம், தூத்துக்குடி சதி வழக்கு ஆகியவைகளைக் குறித்தும் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார்.

இடையில் சில காங்கிரஸ் காலிகள் கலவரம் உண்டாக்கினார்கள்; போலீசார் அவர்களை அப்புறப்படுத்தியதற்குப் பின், மீண்டும் கூட்டம், இரவு 10 மணி வரையில் வெகு சிறப்பாக நடந்தேறியது.

தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் வாங்கும்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* * *

8—11—53 காலை 11-க்கு, தி. மு கழக உறுப்பினர் கூட்டத்தில், தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் நீண்டநேர விரிவுரையாற்றினார். பிறகு, புதிதாக அமைக்கப்பட்ட மாவட்ட கழகத்தைத் திறந்து வைத்தார். மாலை 4 மணியிலிருந்து, 7 மணி வரையில், அக்கிப்பேட்டை, அலசூர், பெரியார் நகர், பிளாக்பல்லி, தி. மு. கழகங்களையும், சீராமபுரம் பகுத்தறிவு மன்றத்தையும், இலட்சுமணபுரி தி. மு. கழகத்தையும் பார்வையிட்டார்.

இரவு 7-15 மணிக்கு, பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

கல்லக்குடி அறப்போர்

★

இன்று

124-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

★

இன்று

123-வது நாள்

தூத்துக்குடி சதி வழக்கு நிதி நாடகம்

தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக காரைக்குடி கலை வளர்ச்சி நாடக சபையினரால், திருத்துறைப்பூண்டி வீயோ எலெக்ட்ரிக் தியேட்டரில் 15-11 53 ஞாயிறு மாலை ‘மேல்நாட்டுப் படிப்பு’ என்ற நாடகம் நடைபெறும்.

சி. பி. சிற்றரசு சுற்றுப் பயணம்

நவ. 18: திருச்செந்தூர்
,, 19: ஆண்டிப்பட்டி
,, 22: பெங்களூர்
,, 24: எருமைநாய்க்கன்பட்டி
,, 25: நக்கவள்ளி
,, 26: சேர்ந்தமங்கலம்
,, 29: கடம்பர்கோயில்
டிச. 4: திருவெங்காடு
,, 6: சென்னை
,, 13: கொமாரபாளையம்
,, 18: எடப்பாடி
,, 25: மேழமங்கலம்

கழகத் தோழர்கள் சுற்றுப்பயணம்

தோழர்கள் சிற்றரசு சுப்ரமணியம், திட்டக்குடி பொன்னம்பலம், ஏ. கே. சீதாபதி ஆகியவர்கள், நவம்பர் 15, 16, 17, 18, 19 தேதிகளில், முறையே கள்ளக்குறிச்சி பொதுக்கூட்டத்திலும், சிறுவங்கூர் தி. மு. கழகத் துவக்க விழாவிலும், தண்டலை தி. மு. கழகத் துவக்க விழாவிலும், தச்சூர் பொதுக் கூட்டத்திலும், அரியபெருமானூர் தி. மு கழகப் பொதுக்கூட்டத்திலும் கலந்துகொள்வார்கள்.

கும்மிடிபூண்டி

8—11—53ல், தி. மு. கழகத்தில் தோழர் நா. கோ. மணாளன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், “தூத்துக்குடி சதி வழக்கும் மக்கள் கடமையும்” எனனும் பொருள்பற்றி தோழர்கள் கு. இராசமாணிக்கம், அருளரசு, சி. அரையரசு, ஞானசுந்தரம், டி. எல்லப்பன், எஸ். மோகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

குன்றத்தூர்

5—11—53ல், ஊர்வலமும், தூத்துக்குடி தினப் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் டி. கே. செழியன் தலைமை தாங்கினார். தோழர் டி. எம். கணபதி, டி. என். சம்பந்தம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.